**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.354/2024 நாள்– 23.09.2024

பெயர் – குமரேசன்

<u>பி.வா.சா.1 – குறுக்கு விசாரணைக்காக (வாதி தரப்பில்)–</u>

நான் 1ம் பிரதிவாதி கோவிலில் 2016ம் ஆண்டு எழுத்தராக பணியில் சேர்ந்தேன். 2024ம் ஆண்டு ஜனவரி மாத்தில் இருந்து வழக்கு எழுத்தராக பணியிலிருந்து வருகிறேன். இந்த வழக்கு பற்றிய விபரம் ஜனவரி மாதத்திலிருந்து தான் தெரியும் என்றால் நகராட்சியிலிருந்து கோவில் சார்பாக சொத்து அளக்கப்பட்டபோது எனக்கு தெரியும். 2017, 2018 ஆண்டுகளில் சொத்து அளக்கப்பட்டது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு அளந்தோமா என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 செயல் அலுவலர் என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ன் படி தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு கோப்புகள் செயல் அலுவலர் கைவசம் இருக்கிறது. அந்த ஆவணங்களை இன்று நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை. அந்த கோப்பை பார்த்தால் தான் என்ன என்ன ஆவணங்கள் இருக்கிறது என்று என்னால் கூறமுடியும். 1ம் பிரதிவாதி கோவில் செயல் அலுவலர் இந்து அறநிலையத்துறை சட்டம் கீழ் என்னை சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்குவதற்கு செயல் அலுவலருக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(சாட்சி ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் 30.09.2024ற்கு ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.